## 7th Term 2, Unit 2. ஊடகமும் ஜனநாயகமும்

1. கீழ்க்கண்டவற்றில் அச்சு ஊடகத்தின் கீழ் வருவது எது?
   அ) வானொலி ஆ) தொலைக்காட்சி
   இ) செய்தித்தாள் ஈ) இணையதளம்

2 . உலகத்தினை சிறியதாகவும், மிக அருகாமையிலும் கொண்டு வந்தது ____________
   அ) வானொலி ஆ) தொலைக்காட்சி
   இ) செய்தித்தாள் ஈ) ஊடகம்

3 . கீழ்க்கண்டவற்றில் ஒலிபரப்பு ஊடகம் என்பது —---------
   அ) இதழ்கள் ஆ) அறிக்கைகள் இ) நாளிதழ்கள் ஈ) வானொலி

4 . உலகினை மக்களின் அருகாமையில் கொண்டு வந்த ஊடகம்—------
   அ) தட்டச்சு ஆ) தொலைக்காட்சி இ) தொலைப்பேசி ஈ) இவற்றில் எதுவுமில்லை

5 . ஒவ்வொரு தனிமனிதனும் ____________ ஆகும்
   அ) நெறிமுறைகள் ஆ) பொறுப்பு இ) ஊடகம் ஈ) கடமைகள்

6 . வெகுஜன ஊடகம் என்பது —---------
   அ) வானொலி ஆ) தொலைக்காட்சி
   இ) அ மற்றும் ஆ ஈ) இவற்றில் எதுவுமில்லை

7 . அச்சு இயந்திரம் ____________என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.
   அ) தாமஸ் ஆல்வா எடிசன் ஆ) ஐன்ஸ்டீன்
   இ) ஜோஹன்னஸ் குட்டன்பெர்க் ஈ) ஆடம்ஸ் குட்டன்பெர்க்

8 . ஊடகம் ஏன் சுதந்திரமாக செயல்பட வேண்டும் —-----
   அ) நிறைய பணம் ஈட்ட ஆ) நிறுவனத்தை ஊக்கப்படுத்த
   இ) நடுநிலையான தகவலை தருவதற்கு ஈ) இவற்றில் எதுவுமில்லை

9 . நமது வாழ்க்கையை தீர்மானிக்கும் மதிப்பீடுகளின் தொகுப்பு____________ ஆகும்.
   அ) நெறிமுறைகள் ஆ) பொறுப்பு இ) உரிமைகள் ஈ) கடமைகள்

10 . இந்திய அரசின் வானொலி ஒலிபரப்பு நிறுவனம் ________________
   அ) 1956 ஆ) 1946 இ) 1936 ஈ) 1926

11 . பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. குறு அளவிலான ஊடகம் | – | அ. கூகுள் இணையம் |
| 2. சமூக ஊடகம் | - | ஆ. சுவரொட்டிகள் |
| 3 . அச்சு ஊடகம் - | – | இ. கருத்தரங்கு |
| 4. இணைய ஊடகம் | – | ஈ. திரைப்படங்கள் |
| 5. ஒலிபரப்பு ஊடகம் | - | உ. முகநூல் |

youtube: @Gurumani24
LIVEWORKSHEETS

அ) 1 - ஆ, 2 - உ , 3 - ஈ, 4 - இ, 5 - அ    ஆ) 1 - இ, 2 - உ, 3 - ஆ, 4 - அ , 5 - ஈ

இ) 1 - ஈ , 2 - உ , 3 - அ , 4 - இ, 5 - ஆ    ஈ) 1 - ஈ , 2 - இ , 3 - உ , 4 - ஆ , 5 - அ

12 . கூற்று: அச்சு ஊடகம் மக்களின் பல்கலைக்கழகம் என கருதப்படுகிறது.

காரணம்: பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குவதிலும், கல்வியறிவு ஊட்டுவதிலும் பெரும்பங்கு வகிக்கிறது மற்றும் பொதுமக்களின் பாதுகாவலனாகவும் செயல்படுகிறது.

அ) கூற்று சரி, காரணம் கூற்றிற சரியான விளக்கமாகும்.

ஆ) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளகக்கமல்ல.

இ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி.

ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

13 . தவறான ஒன்றை கண்டுபிபிடிக்க:

அ) செய்தித்தாள்கள்    ஆ) நாளிதழ்கள்

இ) அறிக்கைகள்    ஈ) கீச்சகம்

14 . கீழ்க்காணும் வாக்கியங்களில் சரியானவற்றை தேர்ந்தெடுக்கவும்:-

அ) ஊடகம் என்பது பொதுவாக ஒருவருக்கொருவர் தகவல்களை பகிர்ந்து கொள்ளும் சாதனம் ஆகும்.

ஆ) ஊடகம் மிகவும் சக்திவாய்ந்த நிறுவனமாகும்.

இ) ஊடகம் மக்களிடம் பொது கருத்தை உருவாக்குவதில் முக்கிய பங்குவகிக்கிறது.

ஈ) ஊடகத்திற்கு எந்த பொறுப்பும் கிடையாது.

i) அ, ஆ மற்றும் இ சரி    ii) அ, ஆ மற்றும் ஈ சரி

iii) ஆ, இ மற்றும் சரி    iv) அ, ஆ மற்றும் ஈ சரி

15. வலைப்பதிவுகள் —-------- ஊடகம் ஆகும் .

அ) இணைய    ஆ) அச்சு    இ) சமூக    ஈ) குறுகிய தொடர்பு

16. கீழ்க்கண்டவற்றுள் எது தொலைத்தொடர்பு ஊடகம் —-----

அ) நேரடி அஞ்சல்    ஆ) கீச்சகம்

இ) திரைப்படங்கள்    ஈ) முகநூல்

17. ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தில் மக்களின் நலனுக்காக செயல்படுவது —----

அ) இணைய ஊடகம்    ஆ) அச்சு ஊடகம்

இ) சமூக ஊடகம்    ஈ) உள்ளூர் ஊடகம்

youtube: @Gurumani24

LIVEWORKSHEETS